544

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

544
25 SEP 1944

Venkatachalam S. 1941-43.

Edit... ...A. Lourduswami, B.A., L.T.
Pu... ...Training School, Trichinopoly.

JL
ஊ211, N11PP
N44·35·1
189988

...15 ஜூலை 1944 மலர் 1

...தனுமுறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணு 2.

போத பூங்கொத்து

பொருளடக்கம் பக்கம்

1. பத்திராதிபர் குறிப்புகள் 1
2. சென்னை கல்வி இலாகா 2
3. வருங்காலக் கல்வித்திட்டம் (Sargent Scheme) ... 3
4. பாடக்குறிப்பு 5
5. சிறு கதை—விறகு வெட்டியும் புலியும் 6
6. காண்டாமிருகம் 8
7. மொகலாய மன்னர்களின் இறுதி நினைவுகள் ... 11
8. தாவரங்களைத் தாக்கும் பூச்சிகளால் ஏற்படும் நோயும், அதைத் தடுக்கும் விதமும் 13
9. ஹாஸ்ய நிகழ்ச்சிகள் 17
10. பெற்றோர் சங்கங்கள் 20

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

சந்தா நேயர்களுக்கு அறிக்கை

சந்தாத் தொகையை அனுப்பும்போது நேயர்கள் தங்கள் சந்தா நெம்பரையாவது அல்லது தங்கள் முழுவிலாசத்தையாவது மணியார்டர் கூபனில் தெளிவாய் எழுதவேண்டியது.

விலாச மாறுதல் அறிவிக்கும்போது நேயர்கள் தங்கள் பழைய விலாசத்தையும் புதுவிலாசத்தையும் தெரிவிக்கவும்.

பத்திராதிபர்.

போதனை விஷயப் பூங்கொத்து

கொத்து 35] 15 ஜூலை 1944 [மலர் 1

பத்திராதிபர் குறிப்புகள்

பூங்கொத்தின் புதுவருடப் புது மலர்.—இந்த ஜூலை மாதத்திலிருந்து நமது "பூங்கொத்தின்" 35-வது ஆண்டு தொடங்குகின்றது. இதோ! இதன் முதன் மலர் மலர்கின்றது. இதுகாறும் அன்போடு ஆதரித்து வந்துள்ள நம் பழைய மாணவர்கட்கும், ஏனைய நம் "பூங்கொத்து" நேயர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியை இச்சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

இதுகாறும் "பூங்கொத்தைப்" போற்றிவந்ததைப்போல், இனியும் அதனைப் போற்றிப் பேணி வருவதுடன், இன்னும் பல புது சந்தாதாரர்களைச் சேர்த்தும், தத்தம் சந்தாக்களைப் புதிப்பித்துக்கொண்டும், தங்கள் தங்கள் அபிமானத்தையும் ஆதரவையும் நம் நேயர்கள் பெருக்கிக்கொள்வார்கள் என யாம் முற்றிலும் நம்புகின்றனம். இதோடு நம் "பூங்கொத்தின்" நோக்கத்திற்கேற்ற விஷயதானங்களையும் தக்கவாறு அளித்துவருமாறு கேட்டுக்கொள்கின்றோம். மற்றுமோர்முறை நம் நேயர்களனைவர்க்கும் எம் நன்றியை இப்புத்தாண்டுப் புதுமலர் மூலமாய்த் தெரிவித்துக்கொள்கிறோம்.

* * *

நம் பாடசாலை வருஷத்தியானம்.—வழக்கம்போல் ஷெதியானம் அடுத்த ஆகஸ்டு மாதம், 12, 13, 14-ம் தேதிகளில்

நம் பாடசாலையில் நடைபெறும். அச்சமயத்தில் தியானம் செய்ய விரும்பும் நம் பழைய மாணவர்கள், தத்தம் விருப்பத்தை முன்னதாகவே இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு எழுதித் தெரிவித்துவிடவேண்டும். அத்தகைய நம் பழைய மாணவர்கட்கு மாத்திரம் குறைந்த சார்ஜில் போஜனம் முதலிய வசதிகள் அளிக்கப்படும்.

சென்னை கல்வி இலாகா

Proceedings of the D. P. I. Madras.
R. C. No. 372-E/44—Dated 25th May 1944.

ஷை உத்தரவின்படி VIII-வது வகுப்பு முடிவுப் பரீட்சைக்கு (E. S. L. C. Examination) இங்கிலீஷ் பாடத்தை ஒரு இஷ்டப் பாடமாக (Optional subject) ஒரு ஹையர் எலிமெண்டரி பாடசாலையில் ஏற்படுத்துவதற்கு முன்பு அதைப்பற்றி கல்வி அதிகாரிகளுக்குத் தெரிவித்து அவர்களது அனுமதி பெற்றபிறகுதான் அப்பாடத்தை வைக்கவேண்டும் என்பதாம். ஷை E. S. L. C. பரீட்சையில் ஏற்கனவே தவறிப்போனவர்கள்கூட, இங்கிலீஷ் பாடத்தை இஷ்டப்பாடமாக ப்ரைவேட்டாகப் படித்து ஷை பரீட்சை எழுதலாம். பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஷை இங்கிலீஷ் பாடம் படித்துதான் பரீட்சை எழுதவேண்டும் என்ற அவசியம் கிடையாது.

விகடம்

மானேஜர் :—என்ன சார்! சும்மா தொந்தரவு செய்கிறீர்களே! என் பள்ளிக்கூடத்திலே வேலைக்கு வைக்கப்போகும் ஆள் நன்றாய் மார்க்குகள் வாங்கியிருக்கவேண்டும். உங்கள் முதல் பாடத்திலேயே 18 மார்க்குத்தானே வாங்கியிருக்கிறீர்கள்?

ஆசிரியர் :—இப்பொழுது அந்தப் பாடத்தில் அதிகம் தேர்ந்துவிட்டேன் சார்.

மானேஜர் :—இப்பொழுதுமட்டும் எப்படித் தேறிவிட்டீர்?

ஆசிரியர் :—நான் போதனாமுறை படிக்கையில் எனக்குப் பிள்ளைகள் இல்லை. இப்பொழுதோ 1, 2, 3, 4 வயதுள்ள எல்லா குழந்தைகளும் என் வீட்டிலே இருக்கிறதே! பாலரியல்பு எனக்குத் தெரியாதா.

M. M. Samuel.

வருங்காலக் கல்வித்திட்டம்

(Sargent Scheme)

யுத்தத்திற்குப் பிறகு மக்களின் வாழ்க்கை நிலையை அபிவிருத்தி செய்வதின் பொருட்டு வெளிவந்துள்ள நிர்மாணத்திட்டங்கள் அநேகம். இந்தியசர்க்காரும் புனருத்தாரண வேலைக்காக ஒரு கமிட்டியை அமைத்துள்ளார்கள். பலவித சமூகத்துறைகளிலும் ஆராய்வதற்காக விசேஷ ஆலோசனைக் கமிட்டிகளையும் நிறுவியுள்ளனர். இந்த நிர்மாணத்திட்டங்களில் முக்கியமானது கல்வித்திட்டமாகும். இத்திட்டம் மத்திய சர்க்காரின் கல்வி போர்டாரால் வகுக்கப்பட்டு பொது மக்களின் ஆதரவை அறியும் பொருட்டு வெளிவந்துள்ளது. இதனைத் தயாரிப்பதற்குக் காரண புருஷர் Mr. John Sargent; இவர் இந்திய சர்க்காரின் கல்வி ஆலோசனையாளர். இவர் சுயமாக ஆராய்ந்து வெளியிட்டுள்ள திட்டத்தையே மத்திய கல்வி போர்டாரும் தங்கள் திட்டத்திற்கு அடிப்படையாகக் கொண்டார்கள்; இதனால்தான் இத்திட்டம் சாதாரணமாக சார்ஜென்ட் திட்டமென வழங்கப்படுகிறது. இதில் வர்தா திட்டத்தின் சில அம்சங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. முக்கியமாக தொழில் கல்வியின் அவசியத்தை உணர்ந்துள்ளார்கள்; மேலும் அடிப்படையான ஆரம்பக் கல்வியில் ஆங்கிலத்திற்கு இடமில்லை யென்பதையும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களைச் சுருங்கக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இத்திட்டத்தின்படி ஆறுவது வயதிலிருந்து 14-வரை வயதுடைய எல்லா இந்தியச் சிறுவர்களும் கட்டாய இலவசக்கல்வி பெறவேண்டும். இது கட்டாய அடிப்படைக் கல்வி யென அழைக்கப்படும். (Compulsory Basic Education) 6-வயதிற்குட்பட்ட சிறுவர்களும் படிப்பதற்காக சில வட்டாரங்களில் Nursery Schools, அவசியமென்றும் கூறுகின்றது. 14-வயது வரைப் படித்து முடித்த எல்லாச் சிறுவர்களும் மேற்படிப்பிற்காக உயர்தரப் பாடசாலைகளுக்கு (High Schools) போகமுடியாது. பரீக்ஷை செய்து, தகுதியுள்ளவர்களைத்தான் உயர்தரப் பாடசாலைகளில் சேர்த்துக்கொள்ளப்படும். மேலும் உயர்தரப் பாடசாலைகள் இருவகையாகப் பிரிக்கப்படும். 1. சாதாரணக் கல்விப்பாடசாலை (Academic Schools) 2. தொழிற் பாடசாலை (Technical Schools). அடிப்படைக் கல்வியைப் பெறும் சிறுவர்களில் ஐந்தில் ஒரு பங்கு மாணவர்களே உயர்தரப் பாடசாலைகளுக்கு வரக்கூடும் என்று இத்திட்டம் கணக்கிட்டுள்ளது. இக்கல்வியின் வயது வரையறை 13-லிருந்து 18-வரையாகும். இதற்கு மேற்பட்ட கல்வி கலாசாலைகளின் பொறுப்பாகும். கலாசாலைக் கல்விக்காக அதிகப்பணம் செலவழிக்க வேண்டுமென்பதையும் இத்திட்டம் வற்புறுத்துகின்றது. இவை தவிர இக்கல்வித்திட்டத்தில் வேறு விசேஷ அம்சங்களும் காணப்படுகின்றன. வயது வந்தவர்களின் கல்விக்காக பிரத்யேக ஆசிரியர்களை நியமனம் செய்து வருஷத்தில் 3-கோடி ரூபாய் செலவு

189988

செய்ய வேண்டுமென்பதையும் கூறுகின்றது. அறிவிலும், தேக ஆரோக்கியத்திலும் குறைபாடுகளுடைய சிறுவர்களின் கல்விக்காக தனிப்பாடசாலைகள் வைக்கவேண்டும். இவை தவிர எல்லாவிடங்களிலும் வாலிப சங்கங்கள், உத்தியோக விஷயமாக ஆலோசனையளிக்கக்கூடிய போர்டுகள் (Employment Bureau) வைத்திய வசதிக்கான ஸ்தாபனங்கள் முதலியன நிறுவுவதற்கான ஆலோசனைகளையும் கூறுகின்றது.

இவ்விதம் இத்திட்டம் பூரணமாக விளங்குவதுடன் ஆசிரியர்களின் பொருளாதார நிலையையும் உயர்த்துவதற்கு நல்ல வழிகளைக் காட்டியுள்ளது. நல்ல சம்பளமும் அந்தஸ்தும் ஆசிரியர் தொழிலுக்கு ஏற்பட்டால்தான் யோக்கியதையுள்ள வாலிபர்கள் இத்தொழிலில் ஈடுபடுவார்கள் என்பதை வற்புறுத்துகின்றது. மாதம் 30 ரூபாய்க்குக் குறைந்த சம்பளமே கூடாது என்று கூறுகின்றது. மேலும் இத்திட்டத்தின்படி ஒவ்வொரு ஆசிரியரும் குறைந்தபக்ஷம் மெட்ரிகுலேஷன் தேறியிருக்கவேண்டும். இத்திட்டத்தை நிறைவேற்றவேண்டிய ஆசிரியர்கள், உத்யோகஸ்தர்கள் முதலியவர்களுக்கு விசேஷப் பயிற்சி அளிப்பதற்கான வழிகளையும் கூறியுள்ளனர்.

இத்தகைய பரந்த திட்டம் அமுலில் வருவதற்கு 40 வருடங்கள் ஆகுமாம்; ஒரு வருஷத்திற்குக் கல்வியின்பொருட்டு 277 கோடி ரூபாய் செலவாகும். நமது நாட்டின் சரித்திரத்திலேயே இத்தகைய திட்டம் ஒருபொழுதும் வகுக்கப்படவில்லை. “இந்தியா மற்ற நாடுகளுக்குச் சமமாக தலைதூக்கி நிற்கவேண்டுமென்றால் இவ்வளவு பணத்திற்கும் வழிதேடத்தான் வேண்டுமென்று” சார்ஜென்ட் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இத்திட்டம் அநேக சீர்திருத்தங்களுக்கு இடங்கொடுத்தபோதிலும் பூரணமானது. ஒரு தேசம் முன்னேறுவதற்கான யோசனைகளை வகுத்துள்ளது. நாட்டின் முன்னேற்றத்தில் சிரத்தையுள்ளவர்கள் யாவரும் இதை வரவேற்கத்தான் வேண்டும்.

பாடக் குறிப்பு

பாடம் : வாசகபாடம். **நேரம் :** 30 நிமி. **வகுப்பு :** 2.

நோக்கம் : செம்படவன் பாடம், 1, 2 பாராக்கள்—வாசக பாடம்.

உபகர்ணங்கள் : கீழ்க்கண்டவற்றைக் குறிக்கும் படம். 1. செம்படவன் மீன்பிடித்தல். 2. மீன்பிடிக்கும் வலை, தூண்டில்.

பீடிகை : தண்ணீர் தேங்கியிருக்கும் இடங்கள், ஆறுகள், இவற்றில் வசிக்கும் பிராணிகள் முதலியவற்றைப்பற்றி சம்பாஷித்துக் குளத்தில் மீன்கள் அதிகமாக வசிக்கும் என்றும் வருவித்து நோக்கம் வெளியிடுதல்.

நோக்கவெளியீடு : மீன்கள் பிடிப்பவன் பெயர், அவன் மீன்களைப் பிடிக்கும் விதம் முதலியவற்றைப்பற்றிப் படிப்போம் எனல்.

25 SEP 1944

விஷயம் :

கடினபத விளக்கம் : நிரம்பி=நிறைந்து. செம்படவன்=மீன் பிடிப்பவன்.

கடினபத உச்சரிப்பு : குளம், ஆழமான, வலையை, உண்டு.

விஷயசாரம் : தண்ணீர் நிறைந்த ஆழமான குளத்தில் பல மீன்கள் வசிக்கின்றன. குளக்கரையில் ஒருவன் உட்கார்ந்துகொண்டு மீன்பிடிக்கிறான். மீன்பிடிக்கிறவன் செம்படவன். தூண்டிலைப் போட்டும் வலைவீசியும் மீன்பிடிப்பார்கள்.

முறை : ஆசிரியரின் மாதிரி வாசிப்பு—தெளிவாகவும், ஏற்ற உச்சரிப்புடனும் நிறுத்தியும் வாசித்தல். சில பையன்களை சப்தமாக வாசிக்கச் செய்யலாம். பிறகு விஷய விளக்கம் செய்யும்பொழுது கடின பதங்களை ஏற்ற வாக்கியங்களில் அமைத்தும் பொருட்களைக் காட்டியும் சந்தர்ப்பங்களை நினைப்பூட்டியும் விளக்கம்செய்து விஷயத்தில் காட்டியபடி கரும்பலகையில் எழுதவும்.

கடினபத உச்சரிப்பிற்கேற்ற பதங்களை கரும்பலகையில் எழுதி விஷயத்தில் காட்டியபடி குறிப்பிட்ட எழுத்துக்களை வர்ண சாக்கட்டியால் எழுதியோ அல்லது கோடிட்டோ அதன் உச்சரிப்பை உச்சரித்துக் காட்டியும் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தலாம். விளக்கம் செய்யும்பொழுதே ஏற்ற கேள்விகள்மூலம் விஷயக்கருத்தை உடனுக்குடன் வினவி வருவித்து பிள்ளைகளின் கவனத்தைக் கவரலாம். விளக்கப்

பட்ட கடின பதங்களை சொந்த வாக்கியங்களில் பிள்ளைகள் அமைத்த லவசியம். பிறகு பிள்ளைகளை மௌனமாக வாசிக்கச்சொல்லி அப்பியாசக் கேள்விகள் கேட்கவும், பூர்த்திசெய்யும் அப்பியாசங்கள் கொடுக்கவும்.

அப்பியாசம் I. கேள்விகள் :—1. குளத்தில் தண்ணீர் எங்கு இருக்கிறது? 2. மனிதன் எங்கே உட்கார்ந்திருக்கிறான்? 3. அவன் என்ன செய்கிறான்? 4. மீன் பிடிப்பவன் பெயர் என்ன? 5. எவற்றால் மீன் பிடிக்கலாம்?

II. பூர்த்திசெய்க :—1. குளத்தில் தண்ணீர் —— இருக்கிறது. 2. பல மீன்கள் ——. 3. மீன் பிடிக்கிறவன் ——. 4. தூண்டிலைப் —— மீன் பிடிக்கிறான். 5 சிலர் வலையை —— மீன் பிடிப்பார்கள்.

சிறு கதை

விறகுவெட்டியும்—புலியும்

(C. Abraham)

ஒரு ஊரில் விறகுவெட்டி இருந்தான். அவன் நாள்தோறும் விறகுவெட்டி ஜீவனம் செய்துவந்தான். ஒருநாள் அவன் காட்டிற்கு விறகு வெட்டப்போனான். போகும்போது அக்காட்டில் ஒரு புலி அவனை மடக்கிக்கொண்டது. அப்புலிக்கு மந்திரியாக ஒரு நரி இருந்தது.

விறகுவெட்டி :—“ஐயா புலியாரே! என்னை ஒன்றும் செய்யாதீர். நான் வீட்டில் பெண்சாதி பிள்ளைகளுக்குச் சொல்லாமல் வந்துவிட்டேன். புலியாரே! நீவீர் உத்தரவு கொடுப்பின், நான் வீட்டில் எல்லோருக்கும் சொல்லிவிட்டுப் பின் வந்து உமக்கு இரையாகிறேன்.” என்று வேண்டிக்கொண்டு சத்தியம் செய்தான்.

நரி :—“புலியரசே! ஒரு மனிதனுடைய சத்தியத்திற்கிணங்கி விடைகொடுக்கவேண்டாம்” என்று வஞ்சகமாகச் சொன்னது.

புலி :—“சரி உன் சத்தியத்திற்கு நம்பி உனக்கு உத்தரவு கொடுக்கிறேன்; சீக்கிரம் போய்வா” என்று விடைபகர்ந்தது.

விறகுவெட்டி வீட்டிற்குச்சென்று ஊரில் உள்ளவரிடம் நான் இதுபோல் புலியினிடம் சத்தியம் செய்துவிட்டுவந்தேன் ஆகையால் நான் போகவேண்டும் என்று சொன்னான். அவர்கள் கேலி செய்தார்கள். பிறகு விறகுவெட்டி தன் வீட்டில் இருந்த ஒரு கொழுத்த

கன்றை வெட்டிக் கூடையில் போட்டு அவனுடைய மகன் தலையில் வைத்து அவனைக் காட்டிற்கு அழைத்துச் சென்றான்.

காட்டில் ஒரு பர்லாங்கு தூரத்திலேயே புலியும், நரியும் அவனைக் கண்டு பேசினதாவது :

நரி :—(தந்திரமாக) "அரசரே! உமக்கு ஏதோ கூடையில் வைத்து எடுத்துக்கொண்டுவருகிறான். அதில் ஏதாவது இருக்கும்!" ஆகையால் அதை நீர் சாப்பிடவேண்டாம்."

OF THE REGISTRAR OF
25 SEP 1944
MADRAS

விறகுவெட்டி அருகில்வந்ததும் அக்கூடையில் என்ன என்று விறகுவெட்டியைப் புலி கேட்டது.

வி. வெட்டி :—ஐயா, உமக்கு ஒரு கொழுத்த கன்றை அடித்து எடுத்துவந்திருக்கிறேன்.

புலி :—"அதில் ஏதாவது கலந்திருக்கிறதா"?

வி. வெட்டி :—ஒன்றும் இல்லை, ஐயா!

புலி : அப்படியானால் ஒரு துண்டை எடுத்து நரிக்குப் போடு.

வி. வெட்டி :—உடனே அவன் ஒரு துண்டை எடுத்து நரிக்குப் போட்டான். நரி அதைத் தின்று வஞ்சகமாகத் துள்ளித்துள்ளி கீழே விழுந்து இறந்ததுபோல் பாசாங்கு செய்தது.

புலி :—உடனே புலிக்குக் கோபம் வந்து விறகுவெட்டியை அதட்டிக் கேட்டது.

வி. வெட்டி :—ஐயா போனது போகட்டும்; ஒரு வேண்டுகோள், வீட்டில் என்னுடைய மனைவி காயலாக இருக்கிறாள்; ஆகையால் இந்த நரி இறந்துவிட்டதே இனி உபயோகப்படாது அல்லவா? இதனுடைய குடலைக் கொடுத்தால் சுகமாகும். இதற்குச் சந்தேகமானால் என் மகனை இவ்விடம் வைத்துக்கொள்ளுங்கள், இதை எடுத்துக்கொண்டு போய் கொடுத்துவிட்டுவருகிறேன் என்று தாழ்மையாய்க் கேட்டான்.

(இதற்குள் நரி ஐயோ கை, கால், காது வெட்டினாலும் போதும், இவன் குடலை எடுக்கப் போகிறானே என்று தனக்குள் வயிற்றைக் கலக்கி பயந்துகொண்டிருந்தது.)

புலி :—"சரி அப்படியே எடுத்து கொடுத்துவிட்டு வா."

(விறகுவெட்டி கல்லில் கத்தியைத் தீட்டும்போதே நரி பயந்து எழுந்து ஓட்டம்பிடித்தது.)

உடனே புலி நரியினுடைய வஞ்சக மொழிக்கு இசைந்து இவனைக் கொல்லப்பார்த்தோமே என்று நினைத்து அவர்கள் இருவரையும் சந்தோஷமாக வீட்டிற்கு அனுப்பினது.

காண்டாமிருகம் (Rhinoceros)

(Rajan Bros.)

காண்டா மிருகங்கள் பெரும்பாலும் இந்தியாவிலும் ஆப்பிரிக்காவிலுமே காணப்படுகின்றன. இவைகளின் தேக அமைப்பும், குணப்பான்மையும் மற்ற மிருகங்களிடமிருந்து இவைகளை வெகுவாய்ப் பிரிக்கின்றன. இவைகளை கல் யானைகள், காண்டகங்கள், காண்டா மிருகங்கள் என பல வகையாய் அழைக்கின்றனர்.

காண்டா மிருகம் சுமார் ஒன்பது, பத்து அடி நீளமும், ஐந்து, ஆறு அடி உயரமும் இருக்கும். எருமைகளைப்போல் இதன் கால்கள் குட்டையானவை. இதன் மூக்கின் மேற்புறத்தில் சிலவற்றிற்கு ஒரு கொம்பும், சிலவற்றிற்கு இரண்டு கொம்புகளும் இருப்பதுண்டு. இக்கொம்புகள் சாதாரணமாய் மூன்று அல்லது நான்கு அடி நீளமிருக்கும். இவைகளும் காண்டகத்தின் எலும்பிலிருந்து முளைக்காமல், தோலினின்றே தோன்றுகிறது. ஈட்டிபோன்ற இந்த உறுப்பு அமைந்து இருப்பதால் இந்த கல்யானைகள் சிங்கம், புலி முதலிய இராஜ மிருகங்களையும் சட்டைப்பண்ணுவதில்லை.

பார்வைக்கு அவலட்சணமான மிருகங்களில் இது முதல் இடம் பெறுகின்றது பன்றியைப்போல் மேல் உதடு குவிந்து இருப்பதால் இரையைச் சேர்த்துத்திரட்டி வாயில் போட்டுக்கொள்ள உதவியாயிருக்கின்றது. இதன் தோல் கபில நிறமானது. சுமார் இரண்டு அல்லது மூன்று அங்குலம் கனமுள்ளது. அதுவும் கால்களின் மேற்புறத்திலும், தொடையிலும் மடிந்து படிப்படியாய்த் தொங்கும். தேகத்தில் உரோமக் கவசம் இல்லை. காதில்மட்டும் உரோமம் சடை சடையாய்த் தொங்கும். போதாக்குறைக்கு முகத்திலும் கொம்பு, மீசை. காலில் மூன்று பிரிவுபட்டக் குளம்புகள். என்ன அழகாயிருக்கும்!

இவைகள் சகஜமாய் யானை, புலி, சிங்கம் முதலிய விலங்குகள் உள்ள காடுகளில் வசிப்பதில்லை. சாதாரணமாய் ஆசியா, ஆப்பிரிக்காக் கண்டங்களிலுள்ள சதுப்பு நிலக்காடுகளில் வசிக்கின்றன. கிழங்கு, இலை, தழை முதலியன காண்டா மிருகங்களின் முக்கிய உணவு சில சமயங்களில் முதலையையும் பிடித்துத்தின்னும். மேலும் எப்பிராணியும் உண்ண முடியாத முட்செடிகளையும் பிடுங்கி வெகு இன்பமாய்த் தின்னும்.

காண்டகம் இயல்பில் எதற்கும் தீங்குச் செய்வதில்லை. எனினும் யானையைப்போல் தனக்குத் தீங்கு செய்தவர்களை எப்பொழுதாகிலும் கொன்று தன் வர்மத்தைத் தீர்த்துக்கொள்ளும் தன்மையுடையது.

இவற்றிற்கு வெகு தெள்ளிய பார்வையும், நுண்ணிய காதும், எவ்வாசனையையும் அறியும் ஆற்றலும் உண்டு. ஆகவே இவைகள் தங்கள் விரோதிகளின் வரவை வெகு எளிதில் தெரிந்துகொண்டு சண்டைக்குத் தயாராகிவிடுகின்றன. தன் எதிரியைக்கண்டு அஞ்சி ஓடாமல் ஆட்டுக்கிடாவைப்போல வீராவேசங்கொண்டு எதிர்த்து நிற்கும். இவைகளின் சரிதையிலேயே மற்றப் பிராணிக்குப் பயந்து ஓடியதாகத் தெரியவில்லை. சுத்த வீரர்களைப்போல் கடைசி வரையில் சண்டை செய்தே இறக்கின்றன. என்ன வீரம்!

காண்டாமிருகத்தைப் பிடிப்பது கஷ்டமான காரியம். அது திரியவும், தங்கவுமான சதுப்பு நிலத்தில் தன் சிறிய குட்டியுடன் உலவும் காலம் பார்த்து, தாயை மட்டும் குண்டுவைத்து சுட்டுக் கொன்றுவிட்டு குட்டியைப் பிடித்து பழக்குவர். இதன் தோல் துப்பாக்கிக்குண்டுக்கேயல்லாமல் வேறு எதற்கும் அசையாது. கல்யானைகளை வேட்டையாடுவதும் பிராணசங்கடமானகாரியம். அசப்பில் ஓடத்தலைப்பட்டு வருமாயின் அதனைத் தொடர்ந்து ஓடுதல் ஒருபோதும் முடியாத காரியம். பெரிய முட்புதர்களையும், பள்ளங்களையும் ஓடைகளையும் எளிதில் தாண்டி முதல்தரமான பந்தயக் குதிரையைவிட வேகமாய் ஓடி மறையும். எவ்வளவு அடித்தாலும், ஈட்டியால் குத்தினாலும் அதன் உடம்பில் உரைப்பதில்லை. வெடி குண்டுகள் தேகத்தில் தைத்தாலும் சட்டைப்பண்ணுவதில்லை. எனினும் எப்பிராணிக்கும் உயிர்நிலை ஒன்று உண்டல்லவா? தொடைகளின் மேல்புறம், இருதயம் முதலிய இடங்களில் வெடிகுண்டுகள்பட்டால் அவை துடித்து அலறி கடைசியாய் உயிர்விடும். கல்யானை என்ற பெயர் இதற்கு மிகவும் பொருத்தமாகவே இருக்கிறதல்லவா?

காண்டா மிருகங்களுக்கும் மாந்தர்க்கும் எப்பொழுதும் தீராப் பகை. கல்யானை மாந்தரைக் கண்டால் கடுஞ் சினங்கொண்டு துரத்தி ஓடிவரும். ஒருவன் தப்பித்துக்கொள்ள எண்ணி ஓடி, மரத்தின்மேல் ஏறிக்கொண்டால், காண்டா மிருகம் அவனைவிடாமல் தொடர்ந்து ஓடி அவன் ஏறியுள்ள மரத்தை அடியோடு பெயர்த்துத் தள்ளி அவனை குத்திக் கொலை செய்தபிறகுதான் தன்வழியே செல்லும். இத்தகைய கொடூர சிந்தையுள்ள விலங்கையும், வருந்தி வதைக்கவல்ல சிற்றுயிர்களும் அநேகம் இருக்கின்றன. ஈ, எறும்பு, முதலியவைகள் மடிந்துள்ள தோலுக்குள் புகுந்து, கடித்து கல்யானைக்கு மிகுந்த உபத்திரவத்தைக் கொடுக்கும். அவ்விதம் உட்சென்ற உயிர்கள் தாங்களே வெளியேவந்தால் ஒழிய, காண்டாமிருகத்தால் அவைகளை வெளியேவிரட்டமுடியாது. வேதனை தாங்காமல் பல மணி நேரம் கத்தித்தீரும். ஒன்றும் வழிகாணுவிடில் கடைசியாக சேற்று நீரில் இறங்கி, அச் சேற்றை உடல் முழுதும் பூசிக்கொள்ளும். அப்பொ

மூது தோலுக்குள் சென்ற பூச்சிகள் மூச்சுவிடவழியில்லாமல் திணறி இறந்துவிடும். இத்தகைய கொடுஞ்சினம்கொண்ட காண்டகத்திற்கும் உயிர்தோழன் ஒன்று உண்டு. அதை "கல்யாணப் பறவை" என்பர். இது ஒருவகையான சிறிய குருவி. அது காண்டாமிருகத்தின் மேல் தங்கி, தேகம் முழுவதும் சுற்றித் திரியும். இப் பறவையை மட்டும் அது ஒன்றும் செய்வதில்லை. அப்பறவை தன் சிநேகிதனின் உடலில் தங்கி, உபத்திரவத்தைக் கொடுக்கும் பூச்சிகளைப் பற்றித் தின்று, அதற்கும் உதவி செய்து, தானும் உயிர்வாழ்கின்றது.

ஆப்பிரிக்காவிலுள்ள காண்டாமிருகங்களுக்கு இரு நீண்ட கொம்புகளும், இந்தியாவிலுள்ளவைகளுக்கு ஒரு கொம்பும், ஜாவா முதலிய இடங்களிலுள்ளவைகளுக்கு ஒரு கொம்பும், ஆனால் சற்று சிறியதாகவும் இருக்கும். இவைகள் சதுப்புநிலக் காடுகளிலும், மரம், செடி, கொடி அடர்ந்த ஆற்றோரங்களிலும் வசிக்கின்றன. சுயேச்சையை நாடித்திரியும் பிராணிகளில் இதுவும் ஒன்று. யானையைப்போல் பழிவாங்கும் குணம் இதனிடம் இயல்பிலேயே அமைந்து இருக்கிறது. தென் ஆப்பிரிக்காவில்லுள்ளவைகளுக்கு வெகு நீண்ட கொம்புகள் இருக்கின்றன. இக் கொம்புகளைக்கொண்டு அத்தேச சுதேசவாசிகள் சண்டைக்கு வேண்டிய ஆயுதங்களைச் செய்து கொள்ளுகிறார்கள். பெண் காண்டாமிருகங்கள் ஒரு ஈற்றில் ஒரே ஒரு கன்றைமட்டும்தான் போடும்.

மழையே வா!

(அ. இளங்கோவன், ஆசிரியர்)

[இயன்றமெட்டிலிசைக்க]

1. வாவா மழையே வாவாநீ
வாவா மழையே வாவாநீ.

2. வாவா மழையே துயர்தடுக்க
வாவா மழையே வளங்கொடுக்க.

3. குட்டை குளங்கள் நிறைந்திடவே
திட்டை வெப்பங் குறைந்திடவே.

4. தாவர வகைகள் செழித்திடவே
ஜீவர்க ளெல்லாங் களித்திடவே.

5. நீயிலை யேல்தண் ணீருண்டோ?
நீயிலை யேல்நரப் பேருண்டோ?

மொகலாய மன்னர்களின் இறுதி நினைவுகள்

[S. கோபாலகிருஷ்ணன்]

1. பாபர்

பாபர் குர்ஆனை ஏந்திக்கொள்கிறார். மகன் ஹுமாயூனின் படுக்கையைச்சுற்றி வலம் வருகிறார். வாடிய முகம், சோர்வுற்ற கண்கள். வாயில் ஜபித்துக்கொண்டே அடிக்கடி ஹுமாயூனைப் பார்க்கிறார், கண் மூடுகிறார். நீர்த்துளிகள் ஒன்றிரண்டு முத்துமுத்தாக சொரிகின்றன.

"அல்லா! என் திருக்குமாரனைக் காப்பாற்றும். இவ்வேழையைக் காப்பாற்றும். என் இன்னுயிரைப் பணயமாகத் தருகிறேன். என் ஆருயிர் மைந்தன் ஹுமாயூனை உயிர் தரிக்கச் செய்யும். ஏழைக்கிரங்கும்! அல்லா! அல்லா!! குர்ஆன் வாழ்க! ஹுமாயூன் வாழ்க! பற்றுக என்மேல் அவன் நோய் யாவும். தொடர்க என்மேல் அவன் வலி யாவும்."

2. ஹுமாயூன்

"ஐயோ! கால் வலி பொறுக்கமுடியவில்லையே! இனி பிழைப்பதேது? ஆ! அல்லா! என் மகன் அமரகோட்டை செல்வன், அக்பர், இளம் வயதினனாக இருக்கிறான். கடவுளே அவனைக் காப்பாற்றும். அகதிக்கு தெய்வம்தான் துணை. "கஸ்தூரிபோல் அவன் புகழ் மணம் எங்கும் வீசும்" என்ற ஆன்றோர் வாக்கும் பொய்க்குமோ? நாடு சிதறுண்டு, பகை மலிந்து கிடக்கிறதே! என் குழந்தை என்ன செய்வான்? என் தந்தை எனக்கு நாட்டை ஈந்தபடி ஒப்புவிக்க என்னால் முடியவில்லையே! அல்லா! அல்லா!! பைராம்! பைராம்!! இதோ என் செல்வத்தை—அக்பரை உன்னிடம் ஒப்படைக்கிறேன். ஹா......"

3. அக்பர்

"முடிதரித்தவர்க்குத் தலையில் இடி காத்திருக்கும்" என்பது பொய்யல்ல. என்ன விசாரம்! என்ன கவலை! மன நிம்மதி என்பதே கிடையாது. கொச்சை மகன் சலீமின் சள்ளை என்று ஒழியும்? எச்சிக்கனிமீது இச்சைகொண்டு துச்சவாழ்வில் இறங்கினான். ராஜபோகம் நுகர ஆவல். யௌவனம், மது, மங்கை மூன்றும் அவனை வாட்டுகிறது! தூர்த்தன்!

அல்லா! இவ்வேழையைக் காப்பாற்றும். இதுகாறும் செய்த பிழையை மன்னியும். நெஞ்சார வஞ்சகம் செய்தேனில்லை என்பது ஆண்டவரே நீர் அறியாததோ? யாவரும் ஒன்று. எம்மதமும் சம்மதம் என்றுகொண்டு இவ்வேழை நடக்கவில்லையோ? பிரஜைகளுக்குள் வேற்றுமை கொண்டிலேன். கலப்பு மணம் கொண்டு பிளவு ஒழித்தேன். சர்வசமய சாரமான ஓர் புதிய கொள்கை நிறுவினேன். ஏழை செய்த தினையளவு குணத்தைக்கொண்டு மன்னியும். ஹா! ஹா!

189988

அதோ! அதோ! நான் உயிர் தரித்திருக்கும்போதே சலீம் கிரீடம் அணிந்து கண்ணாடியில் அழகு பார்க்கிறான்! கடவுளே! என்னை ஏற்றுக்கொள்ளும்! அவனிச்சையை பூர்த்திசெய்வீராக.

4. ஜஹாங்கீர்

"ஆ! என் அன்பே! நூர்ஜஹான்! என் கண்ணைவிட்டு அகலாதே! சிறிது நேரமாவது இராஜ்யத் தொல்லைகளைவிட்டு என்னை களிக்கலாகாதா? இன்ப மனோஹரியே! உன் கையால் எனக்கு ஒரு கோப்பை நிறைய மது கொடு, மனதுக்கு உனக்கு அடுத்தபடியாக மகிழ்ச்சி தருவது மதுவன்றோ. அன்று கோடையில் காஷ்மீரில் நீ தயாரித்த அத்தர் கொண்டு என் மார்பில் பூசுவாயா? இருபத்திரண்டு ஆண்டு தேவலோகபோகம் அநுபவித்தேன். காலம் வெகு வேகமாக ஓடுகிறது. மனிதன் அந்தியில்தான் இதை உணர்கின்றான். யாரோ என்னை அழைக்கிறார்கள். யார்? யார்?? குஸ்ரூ! குஸ்ரூ!! என் மகன் ஆம், ஆம் என்னால் கொலையுண்டவன்."

5. ஷாஜஹான்

"இன்னும் எத்தனை நாள் இந்த அவக்கேடான சிறைவாசம்! எழுபத்துநான்கு வயது ஆகிறது. இத்தள்ளாத காலத்தில் சொல்லொண்ணா வேதனை...என் மனம் பழைய இன்ப நினைவுகளில் தோய்கிறது...காதல்! தூயகாதல்! ஆ! மும்தாஜ்! என் பேரொளியே! இருதய ராணியே! என்னைவிட்டு எங்கு சென்றாய்? நீ மரித்தபின்கூட நான் இந்த அந்தகார உலகில் மூச்சுவிடுகிறேனே! பொன், முத்து, இரத்தினங்கள் வாரி இறைத்துக் கட்டின உன் சௌந்தரிய மஹாலைப் பார்க்கக்கூட முடியாத இந்தச் சிறைவாசம் என் மனதை அறுக்கிறது. மக்களே சத்துருக்கள். மக்களே துரோகிகள். மக்களே எனக்கு எமன். என் மகள் ஜஹநராவால் என்ன செய்ய முடியும்? (மகளை நோக்கி) என்னை உன் சகோதரனிடம் சொல்லி நான் இறந்தபின் என் ராணியின் பக்கத்தில் புதைக்கச்செய். இதுவே என் கடைசி வேண்டுகோளென கெஞ்சிக்கேள் அம்மா...அல்லா! என் தூய காதலின் சின்னம் என்றும் விளங்குக...ஹா..."

6. ஔரங்கசீப்

அல்லா! அல்லா!! ஐம்பது ஆண்டு ஆட்சி. ஓர் பெரும் சம்பவம் எனக்கு அளித்தாய். ரத்தவெள்ளத்தில் நீந்தி தந்தை என்றும் சகோதரனென்றும் பாராமல் சிம்மாசனம் பெற்றேன். நாட்டை விட மதத்துக்காக தங்களுக்காக அநேசரை இம்சித்தேன். தேவரீருக்கு இது தெரியாததா? இந்துக்களை வெறுத்தேன். கோவில்களைத் தகர்த்தேன். மராட்டியரை ஒறுத்தேன். சீக்கிய குருவை சித்திரவதை செய்தேன். யாவும் தங்கள் மதம் பெருகவன்றோ? அல்லா!

அல்லா! எனினும் என் மனம் சாந்திபெறவில்லையே! என் மனதை ஏதோ ஒன்று அறுக்கிறது. என் புதல்வர்கள் சண்டையிடாமலிருப்பாராக! கடவுளே! முகமதியர்கள் ஒறுக்கப்படாமலிருப்பாராக! என் புதல்வர்களே! இதோ என் மரணசாஸனப்படி நாட்டைப் பிரித்துக்கொள்ளுங்கள். சண்டை வேண்டாம். நாடு சீர்கேடு அடைந்திருக்கிறது. யாவரும் விரோதிகளாகிவிட்டார்கள். என் இருதயம் இருள் சூழ்ந்து இருக்கிறது. அல்லா, அல்லா...என்னை மன்னியும்... காப்பாற்றும். எனக்கு என்ன கதி கிடைக்கப்போகிறதோ! என் மனமே என்னை பிய்த்துத் தின்கிறது."

தாவரங்களைத் தாக்கும் பூச்சிகளால் ஏற்படும் நோயும், அதைத் தடுக்கும் விதமும்

(R. Vaithilingam)

ஆரம்பப் பாடசாலைகளில் தற்காலம் இயற்கைப்பாடம் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. இயற்கைப்பாடம் போதிக்கத் தோட்டம் இன்றியமையாததாகும். பிள்ளைகள் பாடசாலைத் தோட்டத்தில் பலவகைத் தாவரங்களைப் பயிர்செய்து, பிராணிகளுக்கும் தாவரங்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமையை அறிந்துகொள்கின்றனர்.

தாவரங்களுக்குச் சில புழுபூச்சிகள் மித்துருக்களாயும், சில புழு பூச்சிகள் சத்துருக்களாயும் இருக்கின்றன. சாதாரணமாக ஆடு மாடு, மண்புழுபோன்றவை தாவரங்கள் செழித்து வளர உரம் முதலியவற்றைத் தருகின்றன. இன்னும் சில புழு பூச்சிகள் தாவரங்களுக்குக் கேட்டை விளைவிக்கின்றன.

பயிர்களுக்குத் தீமை உண்டாக்கும் பூச்சிகள் பல உள. சில பயிர்பச்சைகளை இரம்பம்போன்ற தமது தாடைகளால் வெட்டி கடித்துத் தின்றுவிடுகின்றன. சில செடியின் தண்டு காய் முதலியவற்றைத் துளைத்து செடிக்கு சாரம் போகாதபடி செய்கின்றன. இவ்விதம் செய்வதால் காயின் உருசியும், காயிலுள்ள விதையும், பருத்திச் செடியிலுள்ள பஞ்சும் கெட்டுவிடுகின்றன. வெட்டுக்கிளி வண்டு முதலியன கடித்துத் தின்னும் வகுப்பைச் சேர்ந்தவை. வெட்டுக்கிளி சிறிய சோளப்பயிர், நெற்பயிர், அவரை, பீர்க்கு முதலியவை சிறு செடிகளாய் இருக்கும் பருவத்தில் அவற்றின் தண்டுகளையும் இலைகளையும் வெட்டி கடித்துத் தின்கின்றன. இவை கூட்டம் கூட்டமாக பயிர்களை அழிக்கின்றன.

சிலவகைச் செடிப்பேன்கள், அவரை, மொச்சை கொடிகளையும் தோட்டத்திலுள்ள கத்தரி, சீமைத்தக்காளி, பூஞ்செடி இவைகளைப் பற்றி அவற்றிலுள்ள சாரத்தை உறிஞ்சிக் கெடுத்துவிடுகின்றன. அசுவணி என்ற பூச்சிகளும் தாவரங்களைக் கெடுப்பதுண்டு. இப்பூச்சி

கள் சாம்பல்போன்ற ஒருவித வெண்ணிறப்பூச்சால் மூடப்பட்டிருக்கும். கத்தரிபோன்ற செடிகளில் இருவகைப் பூச்சிகள் விழுவதுண்டு. கத்தரியின் குருத்துகளையும் காய்களையும் துளைத்துத் தின்றுவிடுகின்றன. மற்றொருவகை எரிப்பூச்சி எனப்படும். இது புழுவாயிருக்கும்போதும் பூரண வண்டாயிருக்கும்போதும் இலையிலுள்ள பச்சையைச் சுரண்டி உட்கொள்ளும். இதனால் செடி கெட்டுவிடும்.

நெற்பயிரைத் தாக்கும் பூச்சி நோய் பலவகை. அந்த நோயை உண்டாக்கும் பூச்சிகள் பொதுவாக முட்டை, புழு, கூட்டுப்புழு, பறக்கும் பூச்சி என்ற நான்கு நிலைகளை அடைந்தாலும் அவற்றில் ஒவ்வொன்றின் இனமும உருவமும் அவை புழுவாயிருக்கும்போது செய்யும் கேடுகளும் வித்தியாசப்படுகின்றன. விட்டில்களால் உண்டாகும் தீமை அளவிடமுடியாது. இரண்டாவது நோய் உறைப்புழுவால் உண்டாகிறது. இது பச்சைநிறமுள்ள புழு. இது புழுவாயிருக்கும்போது நெற்றாளை துண்டுதுண்டாகக் கத்தரித்து ஆபத்துகாலத்தில் தான் ஒளிந்துகொள்ள நெற்றாளின் மேல்பாகத்தில் உறைசெய்து கொண்டு அதனுள் வசிக்கும். இவ்விதம் நெற்பயிரைப் புழு பூச்சிகள் தாக்கி நாசம்செய்கின்றன. விளைவும் மட்டுப்படுகின்றது. எனவே மேற்கூறிய பூச்சிகளால் தாவரங்களுக்கு நோய்வந்தணுகாமல் தடுக்க வேண்டும். பூச்சிகள் வராதவாறும் தாவரங்கள் கெடாதவாறும் தடுக்கப் பல முறைகள் உள்ளன. அவற்றை இங்கு விரிவாக கூறுகிறேன்.

சுத்தமாக நிலத்தைப் பண்படுத்தி அதைக் களையின்றி எப்போதும் வைத்திருக்கவேண்டும். வாய்க்கால் வரப்புகளில் உள்ள புல், பூண்டுகளை வேரோடு பறித்து எறியவேண்டும். இங்ஙனம் செய்தால் பூச்சிகள் தங்குவதற்கும் தின்று பிழைப்பதற்கும் இடமின்றிப் போய் விடும். ஒரே இனத்தைச் சேர்ந்த பயிர்களை ஒரே நிலத்தில் வருஷா வருஷம் சாகுபடி செய்யாமல் பயிர்களை மாற்றி சாகுபடி செய்ய வேண்டும். இவ்வாறு செய்துவந்தால் ஒரு விளைச்சலைப்பற்றி வருத்தும் பூச்சிகள், மற்றொரு பயிரை அணுகா. உதாரணமாக, சோளத்தில் விழும் கம்பளிப்பூச்சி பருத்திச்செடியை சேதப்படுத்துவதில்லை. பருத்தியைக் கெடுக்கும் செம்புழு சோளத்தைக் கெடுப்பதில்லை. ஆகையால் பயிர்களை மாற்றிவந்தால் நிலத்தில் ஒருவாறு பூச்சிகள் வராமல் தடுக்கலாம்.

கோடையில் நிலத்தை உழுது மண்கட்டிகளை நன்றாகப் புரட்டி விட்டால் பூமிக்குள் இருக்கும் பூச்சியின் முட்டைகளும் பூச்சிக்கூடுகளும் மேலே கொண்டுவரப்பட்டும், இவைகள் சூரிய உஷ்ணத்தினாலும், பட்சிகளாலும் நாசமடைந்துவிடும். புற்களும் அந்நிலத்தில் இல்லாமல் எடுபடும். நிலத்திற்குள் காற்று தாராளமாய்ச் சென்று மண் மிருதுபடும். அத்துடன் அதிக உரமிட்டால் பயிர்கள் நன்கு செழித்து வளரும்.

உறைப்புழுக்களைத் தடுக்க வயலில் நிரம்பத் தண்ணீர் தேக்கிவைக்க வேண்டும். தண்ணீர் நிரம்பி இருக்கும்போது அப்பூச்சிகள் வெளியேறி வருவதை நாம் நேரில் கண்டுகொள்கிறோம். இங்ஙனம் வெளியேறும் பூச்சிகளை காகம், மைனா, பருந்து முதலிய பறவைகள் உண்டு களிக்கின்றன. ஆதலால் அடிக்கடி தண்ணீரை வயல்களில் நிரப்பி தேக்கிவைக்கவேண்டும்.

விசேஷமாக கம்பு, நெற்பயிர் இவற்றில் விழும் பூச்சிகளை விளக்குப் பொறியால் அழித்துவிடலாம். ஒரு பெரிய பாத்திரத்தில் (கிரஸினும்) சீமை எண்ணெய்யும் தண்ணீரும் கலந்துவைத்து அதன் மேல் ஒரு வெளிச்சத்தை வைத்தால் அந்த வெளிச்சத்தால் கவரப்படும் பூச்சிகள் விளக்கிற் பாய்ந்து கீழேயுள்ள நீரில் விழுந்து நாசமடையும்.

விதைக்கும் காலத்தையும் பயிர்களைப் பெயர்த்து நடும் காலத்தையும் சிறிது முன்பின்னாக மாற்றிவந்தால் பூச்சிகளால் உண்டாகும் சேதத்தை ஒருவாறு நிறுத்தலாம். உதாரணமாக ஒரு வருஷத்தில் ஒரு குறித்த பருவத்தில் மாத்திரம் வெளிப்படும் பூச்சிநோய் பிந்தி விதைப்பதால் அந்நோய் தோன்றும் காலத்தில் ஆகாரம் கிடையாமல் மடியும். அல்லது நோய் வெளிப்படுமுன் விதைப்பின் பயிர்கள் சரியான வளர்ச்சிக்கு வந்துவிடுமாகையால் அந்நோயின் கடுமையைத் தாங்கிக்கொள்ளும் சக்தி உடையன ஆகின்றன.

மாமிச பக்ஷணிகளாகிய சில பறவைகளை வளர்த்து வயலிலுள்ள பூச்சிகளையும் புழுக்களையும் கொல்லும்படி செய்யலாம். விசேஷமாக கோழி, புறா, வாத்து என்பன பூச்சி புழுக்களைத் தின்றுவிடுகின்றன. மைனாவும் மரங்கொத்திப் பறவைகள் இவைகளும் தாவரங்களுக்குக் கேடு உண்டாக்கும் புழு பூச்சிகளைத் தின்று ஜீவிக்கின்றன. ஆகையால் மேற்கூறிய பறவைகள் வயலில் வந்து தங்க வசதியாய் வயலின் மத்தியில் அங்குமிங்கும் நீண்ட குச்சிகளை நடவேண்டும்.

நிலத்தைச் சுற்றி நாத்தங்கால் செய்வதுபோல் வாய்க்கால்களைத் தோண்டி அதன்மேல் எல்லாம் புழுதியாக்கி வைத்தால் அதில் ஊர்ந்து செல்லும் புழுக்கள் அதனைத் தாண்டமுடியாமல் அங்கேயே விழுந்தொழியும்.

கம்பளிப்பூச்சி, பச்சைவண்டு, கத்தரிசெடியில் விழும் எரிப்பூச்சிகளை கையாற் பிடித்து நசுக்கிக் கொல்லலாம். அவை மிதமிஞ்சியிருந்தால் கைவலை அல்லது பெரிய வலையை பயிர்மேல் பாகிக் கொண்டே போனால் வலைக்குள் அவை சிக்கிவிடும்.

சாதாரணமாக பயிர்க்குழி, புஷ்பச் செடிகள் போன்றவற்றைத் தாக்கும் பூச்சிகளை புகையிலைக் கஷாயத்தால் அழிக்கலாம். காய்ந்த சுண்ணாம்புத்தூளை செடிகளில் தூவினால் சில பூச்சிகள் அழிந்துவிடும். விசேஷமாக கீரை காய்கறி செடிகள்மீது இத்தூளை தூவுவது நலம். இப்படிச் செய்வதால் இப்பொடியின் காரத்தைப் பொறுக்காமல் பூச்

சிகள் அழிந்துவிடும். பழவர்க்க மரங்களில் கிளைகளிலும் காம்பிலும் வெள்ளையடித்தால் துளைக்கும் வண்டுகள் அவற்றை அணுகா.

சுண்ணும்பு கலந்த மயில் துத்தமும் பூச்சிகளைப் போக்கத்தக்கது. மயில் துத்தமும் சுண்ணும்பும் கலந்த நீரை நோய்பிடித்த தாவரங்களின்மேல் தெளித்தால் நோய் நீங்கிவிடும். கரும்பில் அதிகத் தித்திப்பான பொருள் இருப்பதால் நட்டவுடன் கரையான் முதலிய பூச்சிகள் அதைத் தின்றுவிடும். அதைத் தடுக்க மயில் துத்தம் கரைத்த நீரைத் தெளித்தால் கரையான் அணுகா. ஆகவே, தாவரங்களைப் பீடிக்கும் பூச்சிகளை அழிக்கப் பலவித மருந்துகளை நாம் அறிந்திருந்தாலும் அந்த நோய் வருமுன்னரே வராதவாறு காத்துக்கொள்ளவேண்டும். எனவே, தற்காலம் விவசாயத்தை விருத்திசெய்ய நவீன விஞ்ஞான முறைகளில் பலவித மருந்துகளையும் பயிர்களையும் பயிர்செய்யும் வகைகளையும் அறிஞர்கள் கண்டுபிடித்து இருக்கின்றனர். அவற்றை பாமரமக்களுக்கும் சொல்லி நன்முறையைக் கையாளும்படியும் வழிகாட்டிவருகின்றனர். இதன் நிமித்தமே ஆங்காங்கு விவசாயப் பண்ணைகள் ஏற்படுத்தி தாவரங்களைப் போற்றும் விதத்தை ஜனங்களுக்கு அறிவித்து வருகின்றனர்.

குறிப்பு.—கிராமவாசிகளின் பஞ்சாங்கம்போன்ற விவசாய இலாகா பிரசுரங்களில் ஷை விஷயங்களைப்போன்ற விவசாயக் குறிப்புகள் பிரசுரிக்கப்பட்டு வருவதை ஆசிரியர்கள் படித்தறிவது நலம். (ப-ர்.)

உயிர் எழுத்து பழமொழிகள்

(A. M. ஞானசம்பந்தம்)

அடக்கம் ஆயிரம் பொன் பெறும்.
ஆலும் வேலும் பல்லுக்குறுதி.
இடுவது பிச்சை பெறுவது மோட்சம்.
ஈயாத லோபி இருந்தென்ன இறந்தென்ன?
உண்மைக்கு ஒருபோதும் பழுதில்லை.
ஊர்வாயை மூட ஒரு மூடி உண்டா?
எல்லாம் தெய்வச் செயலே ஆகும்.
ஏறவிட்டு ஏணியை வாங்கலாமா?
ஐம்பது வந்தாலும் அவசரம் ஆகாது.
ஒருவன் அறிந்தால் உலகம் அறியும்.
ஓடம் வண்டியிலே வண்டி ஓடத்திலே.
ஔவையார் வாக்கே அமுத வாக்கு.

ஹாஸ்ய நிகழ்ச்சிகள்

[M. Henry Samuel.]

1. இரண்டு ஆசிரியர்கள் சந்தித்தார்கள். ஒருவர் "சார்! பஞ்சப் படி என்கிருர்களே! அது என்ன சார்?" என்ருர். (அவர் ஒரு லோயர் கிரேடு ஆசிரியர். பாவம்! War Allowance என்ருல்தான் தெரியும் அவருக்கு.) மற்றவர் பின்வருமாறு வியாக்யானம் செய்ய ஆரம்பித்தார்:—இந்த யுத்தகாலத்திலே விலைவாசி உயர்ந்துவிட்டதால் உத்தியோகஸ்தர்களுக்கு கொஞ்சம் ரூபாயை மாதாமாதம் படி போல் தருகிருர்கள். பஞ்சத்திலே (தரித்திரத்திலே) படி தருவதால் பஞ்சப்படி என பெயர் கொடுத்திருக்கிருர்கள்.

எப்படி இந்த வியாக்யானம்? [பஞ்சம் = தரித்ரம்.]

2. ஒரு பள்ளிக்கூட ஆசிரியர் ஒரு சிறு கண்ணடி கூஜாவை பள்ளிக்கூடத்தில் வைத்து அதில் பல பூக்களைக் கொத்துக் கொத்தாகக் கொண்டுவந்து வைக்கச்சொன்ஞர். (இயற்கைப் பாடம் நிதரிசன முறையில் போதிக்கவேண்டும் என்ற எண்ணம் அவருக்கிருந்தது), மாணவர்கள் மறுநாள் பல "பூங்கொத்துகளை" சொருகிஞர்கள். ஆசிரியர் வந்து பார்த்ததும் விழுந்து விழுந்து சிரித்தார். ஏனெனில் அதில் ஒரு "பூங்கொத்து"ம் (இந்த பத்திரிகைதான்) சொருகப் பட்டிருந்தது. அது அவர் மகன் ஜேம்ஸ் வேலைதான்!

3. சில ஆரம்பப்பாடசாலை மானேஜர்கள் தங்கள் பாடசாலைக்கு "கல்வி"க்காகப் பாடுபடும் சில பத்திரிகைகளை வரவழைத்துத் தருகிருர்கள். சில ஸ்தலஸ்தாபனங்கள்கூட "கலைமகள்"—"கல்வி"—"போ. வி. பூங்கொத்து" முதலியவைகளை பாடசாலைக்குத் தருவிக்கிருர்கள். ஆனல் பல ஆசிரியர்கள் அதன் பலனை அனுபவிப்பதாகத் தெரியவில்லை. சிலர் இருக்கிருர்கள், அம்மாதிரியான பத்திரிகைகளை விலைக்கு வாங்கியே படிக்க. ஆனல் சிலர் தங்கள் பள்ளிக்கூடத்திற்கு வரும் பத்திரிகையின் பேரையே அறியாமல் இருக்கின்றனர். அந்தோ! என்ன பரிதாபம்!!

"கல்வி"க்காக என்று அச்சிடப்படும் பத்திரிகையில் என்னசார் விஷயம் வருகிறது, என சிலர் நினைக்கலாம். நமக்கு இதற்கு முன்னமே தெரியாத பல புது விஷயங்கள் (பறவைகளைப்பற்றி) "கல்வி" (தியாகராயநகர்) யில் வரவில்லையா? கல்வியிலாக்கா டைரக்டரது பல சுற்றறிக்கைகள் "பூங்கொத்தில்" (இது வெளியாகும் ஊரை கூடவா போடவேண்டும்?) வரவில்லையா? இதைப் படித்தாலல்லவா புதுமுறை விஷயங்களை அறியலாம். இதையெல்லாம் விட்டுவிட்டு பத்திரிகையில் என்ன இருக்கிறது என்ருல் என்னத்தை சொல்வது.

நான் மே-லீவில் ஒரு ஆசிரியரைச் சந்தித்தேன். "குட்மார்னிங்" (Good-morning) என்றார். நானும் அதையே அவருக்குத் திருப்பினேன்.

வந்தவர்: நீங்கள் ஒரு ஆசிரியர்தானே!

நான்: ஆமாம்.

வந்.: சார்! செக்கண்டரி டிரெயினிங்குக்கு S. S. L. C. பாஸ் பண்ணுதவர்கள்கூட சேரலாமாமே! அல்லது ஏதோ மார்க்குகள் வாங்கவேண்டுமாமே!

நான்: ஆமாம். உங்களுக்குத் தெரியாதா?

வந்.: தெரியாதேசார்! நானும் S. S. L. C.-யின் பாஸ் ஆகாத நபர்தான்.

நான்: போய் நீங்கள் படிக்கலாமே செக்கண்டரி டிரெயினிங்.

வந்.: அதன் முழு விபரமும் தெரியமாட்டேன்கிறது சார்! கொஞ்சம் சொல்லுகிறீர்களா?

நான்: நீங்கள் எந்த ஊரில் வேலை பார்க்கிறீர்கள்?

வந்.: ....

நான்: அந்தப் பள்ளிக்கூடத்திற்கு ஏதாவது பத்திரிகை வருகிறதா?

வந்.: என்னமோ ஒன்று வருகிறது! அது ஏன்சார் நமக்கு நீங்கள் விஷயத்தைச் சொல்லுங்கள்.

நான்: சொல்லுகிறேன் அந்த பத்திரிகை பெயர் என்ன?

வந்.: பூஞ்செடியோ.......பூங்கொத்தோ......ஞாபகமில்லை.

நான்: என்ன சார்! பள்ளிக்கூடத்திற்கென வரும் பத்திரிகையின் பெயர் ஞாபகமில்லையா? பூஞ்செடி—பூங்கொப்பு இல்லை. பூங்கோத்து.

வந்.: நான் அதை பார்த்தால்தானே சார்!

நான்: அதிலே போய் பாருங்கள். இந்த S. S. L. C.-க்கு சேரும் நிபந்தனைகள் எல்லாம் இருக்கிறது.

வந்.: என்ன! அதிலே இப்படி பிரயோஜனமாகக்கூடிய விஷயங்கள் கூடவா வருகிறது.

நான்: அதுமட்டுமா! ஆசிரியர் தன் தொழிலை கஷ்டப்பட்டு நடத்திவிட்டுக் களைத்து இருக்கும்போது, அதில் வரும் விகடங்களையும், சிறு கதைகளையும், கல்விக்கு அவசியமான ஹாஸ்ய கட்டுரைகளையும் வாசித்தால் நம்மையறியாமல் சிரிப்பு வரும்.

வர் : இருங்கசார்! சுந்தாம் வாத்தியாருகிட்ட ஏப்பிரல் மாதத்தில் வந்த "பூங்கோத்து" இருக்கிறது, பார்த்துவிட்டு வருகிறேன்.

வந்த ஆசிரியர் போய்விட்டார். அவரைப்போல் இன்னும் பலர் இருக்கலாம். அவர்கள் எல்லாம் "இந்த கல்விப்பத்திரிகையிலே என்ன சார் இருக்கிறது" எனப் பேசாமல் இருக்கின்றனர். பத்திரிகைகளில் என்ன இருக்கும்? பேப்பரும் எழுத்தும்தான் இருக்கும். அந்த எழுத்துக்களைக் கூட்டி வாசித்து அதை ரஸிக்கத் தெரியவேண்டுமே! அதுவும் ஒரு கலைதான். இப்படி பத்திரிகைக்காக பலர் அலையும்போது சிலர் வீணுக பத்திரிகையைப் பாராமல் அலட்சியம் பண்ணுவது வருந்தத்தக்கதே! பத்திரிகைகளில் பல நூதன அரிய விஷயங்களும் வருகிறது. அதைத் தெரிந்து வைத்துக்கொள்ளவேண்டுமல்லவா? ஆம். வேண்டும். கண்டதும் கற்பவன்...பண்டிதன் ஆவான்.

இப்பத்திரிகையை எடுத்துக்கொள்வோம். ஒரு சிறு கதை—ஒரு பாடக் குறிப்பு (இது அவசியமா?—இந்த கேள்விக்கு நீங்களே பதில் தயாரித்துக் கொள்ளுங்கள்). ஹாஸ்யத்துணுக்குகள்—சுற்றறிக்கைகள்—பலவிதக் குறைகள்—யோசனைக் கணக்குகள்—விடுகதைகள் மற்றும் ஒவ்வொரு இதழிலும் வேறு ஏதாவது நவீன விஷயங்கள் வருகிறது. உதாரணமாக—"நெல்லின் வகைகள்" உங்களுக்குத் தெரியுமா?

மேற்கூறிய விஷயங்கள் யாவும் வருவதால் இப்பத்திரிகையை மிகவும் மெச்சுகிறேன். ஏனெனில் ஆசிரியர்கள் தங்கள் தொழிலை கஷ்டத்துடன் நடத்திவிட்டுக் களைத்துப்போகையில் இப்பத்திரிகையை எடுத்தால் ஹாஸ்யங்கள் அவரது களைப்புக்கு மருந்தாகி விடுகிறது. ஓய்வு நேரப்பொழுது போக்குக்கு யோசனைக் கணக்குகளும் விடுகதைகளும் இருக்கிறது. நான் ஒரு புது ஓய்வுநேர பொழுது போக்கும் இதிலே ஆரம்பித்து விட்டேன். கல்விப் பத்திரிகைகளிலேயே மிகச் சிறந்தது இப்பத்திரிகையே! ஏனெனில் ஆசிரியர்களின் நோக்கத்திற்கிசைய இப்பத்திரிகை வெளிவருகிறது.

சரி! என்ன என்னமோ சொல்லிவிட்டேன். இனியாவது பத்திரிகைகளை அலட்சியம் செய்தவர்கள் அதைக் கவனிப்பார்கள். ஏனெனில் இந்தக் கட்டுரையை வாசித்து இதிலுள்ளவைகளைக் கவனித்து இருப்பார்களல்லவா? அடடா! இந்தப் பத்திரிகையை வாசித்தாலல்லவா இனி கல்விக் கட்டுரைகளை வாசிக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றும். நீங்களாவது அவர்களுக்குச் சொல்லுங்களேன். (இதை வாசிக்க).

பெற்ருேர் சங்கங்கள்

31—5—44-ல் ஈரோடு "ஜோதி கல்வி நிலையம்" பாடசாலையின் இரண்டாவது ஆண்டுநிறைவிழா திரு. M. ஜெகநாத முதலியார் அவர்களின் தலைமையின்கீழ் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் புதுச்சேரி கவிபாரதிதாசன் அவர்களும் திரு. S. மீனுக்ஷிசுந்தர முதலியார் அவர்களும் இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். ஷை பாடசாலைமாணவர்களைக்கொண்டு "புத்தர்கருணை" எனும் ஓர் இனிய நாடகம் நடத்திக் காட்டப்பட்டது. வந்தனேபசாரத்துடன் விழா நிறைவெய்தியது.

S. Marimuthu, Manager.

2—6—44-ல் ஒரத்தூர் (திருக்காட்டுப்பள்ளி) செல்லம் உயர்தர ஆரம்பப் பாடசாலையின் வெள்ளிவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தஞ்சை ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ பட்டாபிராம சாஸ்திரி B.A., L.T., அவர்கள் தலைமை வகித்தனர். பற்பல ஆடல் பாடல்கள் நடைபெற்றதுடன் ஷை பாடசாலையின் மானேஜரும், தலைமையாசிரியருமான ஸ்ரீ T. P. செல்லசாமி அய்யர் அவர்களது அரிய சேவையைப்பற்றி அறிக்கை வாசிக்கப்பட்டது. அன்னவர் 25-வருடகாலமாக ஆரம்பக்கல்வியின் பொருட்டு உழைத்து வருதல் போற்றப்பட்டது. அவரது உருவப்படமும் அவ்வமயம் திறந்து வைக்கப்பட்டது. போஜனம், சிற்றுண்டிகள் முதலிய உபசாரங்களுடன் ஷை வைபவம் இனிது முடிந்தது.

189988

T. P. Chellaswamy, Manager.

22—6—44-ல் உடையார்பாளையம் தாலுகா திருமழபாடி லேபர் பாடசாலையின் பெற்ருேர் சங்கக்கூட்டம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மேலும் ஷை பாடசாலையில் "பழந்தமிழ் மாணவர்களின் முன்னேற்றக் கழகம்" ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. அரியலூர் ரேஞ்சு ஸீனியர் டெப். இன்ஸ். திரு K. இராமலிங்கம் B.A., L.T., அவர்கள் தலைமை வகித்து நடத்திவைத்தனர்.

27—6—44-ல் கோவில்பட்டி தாலுகா பெரியசாமிபுரத்து அர்ச். அந்தோணியார் ஆரம்பப் பாடசாலை மாணவ-மாணவிகள் கல்வி சுற்றுப்பிரயாணம் செய்தனர். ஆதிகாலத்து "பிரேதஜாடி" ஒன்றைப் பார்த்து மகிழ்ந்தனர். பானை சட்டிகள் வனைதலைக் கண்டானந்தித்தனர். பார்த்த விஷயங்கள் பூகோள சரித்திர பாடங்களுக்குத் துணைநின்றதைக் கண்டறிந்தனர்.

சங்கீதம்

(இங்கிலாந்து)—பூகோளப்பாட்டு

[S. S. Arockiaswamy H. M., Hanumandanpatti.]

(கட்டப் பொம்மு மெட்டு—போகாதே போகாதே என் கணவா)

1. சங்கம் புகழ்ந்திடும் இங்கிலாந்து
சாற்றுவோம் பாலர் மனமகிழ்ந்து
சிங்கவீரர் ஆங்கிலேயர் சேர்ந்து
ஜீவிக்கிறார் கைத்தொழில் புரிந்து.

2. மித உஷ்ணத்தீவு அதன்பெருமை
மேலும் கடல்சூழ்ந்திட்ட உரிமை
நதிகள் பாய்ந்தோடும் வயல்கோதுமை
நகரைச்சுற்றி தோட்டங்கள் மகிமை. சங்.

3. ஆப்பிளோ டாரஞ்சு மாதுளையும்
அன்னாசு திராக்ஷை பழக்குலையும்
தோப்பு தோப்பாக கனிவிளையும்
தூறும் மழைகுளி ரும்பனியும். சங்.

4. குதிரைபன்றி யாடு மாடுகளும்
கோழிவாத்து புறாக் கூடுகளும்
அதிக உயரம் மேல்மாடிகளும்
அந்தம் குடிசை மண்வீடுகளும். சங்.

5. ரொட்டி தேத்தண்ணீர்பால் காப்பிதோசை
முட்டை இறைச்சிகள் வட்டமேசை
சட்டை ஜோடுதொப்பி இங்கிலீஷ்பாஷை
சர்பத் மதுபானத் தின்மீதாசை. சங்.

6. ஆலயம் பள்ளிக்கூடங்கள் பாரும்
அதிகாரப்பட்டம் படிப்பு நேரும்
மாலை கடற்காற் றுலாவுவாரும்
மணலில் பாலர் விளையாடும்சீரும். சங்.

7. இரும்பு நிலக்கரி எடுத்திடுவார்
இயந்திர வார்ப்புத் தொடுத்திடுவார்
கறுப்புதேசம் பெயர் கொடுத்திடுவார்
கண்டம் ஐரோப்பா அடுத்திடுவார். சங்.

Reg. No. M. 1534

OUR EMPLOYMENT BUREAU

1. **WANTED** Secondary Grade and Elementary Grade Trained Teachers on decent salary.

Apply
The HEADMASTER,
R. C. Secondary Training School,
TRICHINOPOLY.

2. **WANTED** for the R. C. Higher Elem. Schools, Cheyyur and Tachur (Madurantakam Taluk) two Secondary Grade Trained Teachers immediately. Salary Rs. 25/- per mensem.

Apply
The MANAGER,
R. C. Elementary Schools,
Tindivanam, SOUTH ARCOT Dt.

3. **WANTED** immediately two Secondary Grade Trained Teachers on Rs. 30/- per mensem with dearness allowance.

Apply
The MANAGER,
Jothi Kalvi Nilayam,
ERODE.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.